## உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச் சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ஆண்டின் இறுதியில் களஞ்சியத்தில் காணப்பட்ட தொலைபேசி முறைமையின் 132 விடயங்களின் பெறுமதி கணிக்கப்பட்டு இறுதி இருப்புக்கு கொண்டு வரப்படவில்லை.

#### 1.2.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணப்பட்ட ரூபா 574,254 தொகையான கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 283,970 தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கும் ரூபா 32,086 தொகை 1 இலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலத்திற்கும் தொடர்புபட்டதாக இருந்ததுடன் அம்மீதிகளைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

கீழே தரப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூலச் சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | ஏனைய பெறவேண்டியவைகள் | 2,821,455 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஆ) | ஏனைய செலுத்தவேண்டியவைகள் | 10,421,687 | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள |
| (இ) | கட்டிடம் | 4,788,000,000 | உடமை உறுதி |

## 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 802(3) | வூாகணங்கள் மற்றும் இயந்திரங்கள் சம்பந்தமாக ஒரு பதிவேடு பேணப்பட்டிருந்த போதிலும் அதில் வாகணங்கள் கொள்வனவு செய்த திகதி, கிரயம் முதலிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | சுற்றுநிருப அறிவுறுத்தல்களுக்கு இணங்க கணனி நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 3.1 இலிருந்து 3.6 வரையான பிரிவுகள் | வுழமையான வேலைகளுக்குப் புறம்பாக, அவசரமாக, வழமையான கடமைக் காலத்திற்குள் செய்ய முடியாத வேலைகளுக்கான மேலதிக நேரத்திற்கு பணம் செலவு செய்யமுடியுமான போதிலும் சபையின் பதவியினர் அடிக்கடி மேலதிக நேர வேலையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 4,453,905 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முகாமைத்துவச் சபையின் செயற்பாடுகள் ரூபா 11.497,626 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 1.228,632 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 10,268,994 தொகையான வீழ்ச்சிக்கு ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 9,042,217 தொகையால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

### 2.2 பற்றாக்குறை வேகமாக அதிகரித்தல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளினை ஒப்பீடு செய்த போது சபையின் பற்றாக்குறை வேகமாக அதிகரித்தமை திரண்ட நிதியத்தினைப் பாதகமாகத் தாக்கமளித்திருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | பற்றாக்குறை | திரண்ட நிதியத்திற்கான பற்றாக்குறை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2010 | 894,478 | 43,330,279 |
| 2011 | 2,483,781 | (79,475,324) |
| 2012 | 11,915,862 | (197,936,899) |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போது 18 செயற்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 07 நடவடிக்கைகளை மாத்திரம் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மின்சாரச் செலவுகள் ரூபா 38,287,039 ஆகக் காணப்பட்டதுடன் அது மொத்த னயன்படுத்திய செலவில் 87 சதவீதமாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. மின்சார செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்க வேண்டியதான நீண்ட கால நிரந்தர செலவுகளான மத்தியப்படுத்தப்பட்ட வாயு சீராக்கி முறைமையின் செயற்திறனை அதிகரித்தல் ஒரு தீர்வு என முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ii. 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க பாதீட்டு சுற்றுநிருபத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டில் எரிபொருள் மற்றும் மின்சாரத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டு எல்லைக்குள் உரிய செலவுகள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். மீளாய்வாண்டில் சபையின் மின்சாரச் செலவுகள் ரூபா 38,287,039 ஆக இருந்.த போதிலும் அதற்கான மொத்த நிதி ஏற்பாடு ரூபா 27,890,000 ஆக இருந்ததனால் ரூபா 10,397,039 ஆல் நிதி ஏற்பாட்டை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தது.

iii. மின்சாரப் பட்டியல்களை உரிய திகதிகளில் செலுத்தாததன் காரணமாக ரூபா 114,191 தொகை தண்டப்பணமாக மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

வரைபு நிதிக்குற்றுக்கள் தொடர்பான தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 883,151 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் சபையின் மார்சல் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. அதற்கிணங்க அக்கணக்கீட்டுக் குறைபாடுகள் நிவர்த்தி செயயப்பட்டு நிதிக்கூற்றுக்கள் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் தெரிவுக்குப் புறம்பாக

மேலும் கணக்கீட்டுக் குறைபாடுகள் காணப்படக்கூடியமையினை மறுக்க முடியாதுள்ளது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடும் நிதிக் கட்டுப்பாடும்

(ஆ) சொத்துக்கள் கட்டுப்பாடு